தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 23, தாது—திருவள்ளுவர் ஆண்டு 2027

1996 ஆகஸ்ட் 7, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

ஆறு, கடல் எனும் இரு புனலும், வளர்ந்தோங்கி நீண்டமைந்த மலைத் தொடரும், வருபுனலாம் மழையும், வலிமைமிகு அரணும் ஒரு நாட்டின் சிறந்த உறுப்புகளாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள், வினா எண் 106, டாக்டர் எம். மோசஸ், மாண்புமிகு முதலமைச்சர்.*

106—

காவல் நிலையம் அமைத்தல்

* *1697*—**டாக்டர் எம். மோசஸ்:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட தெங்கம்புதூரில் ஒரு காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட தெங்கம்புதூரில் காவல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

டாக்டர் எம். மோசஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தெங்கம்புதூர், புத்தளம், மேலமணக்குடி போன்ற பஞ்சாயத்துக்கள் சுசீந்திரம் போலீஸ் ஸ்டேஷனோடு இணைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் ஒரு குற்றம் நடந்தால் காவலர்கள் வர வேண்டுமானால் சுசீந்தரத்திலிருந்து நாகர்கோவிலுக்கு வந்து நாகர்கோவிலிலிருந்து மீண்டும் பஸ் ஏறி இந்த இடங்களுக்கு வர வேண்டியிருக்கிறது. இந்த இடங்கள் பொதுவாக வன்முறைகள் நடக்கக்கூடிய இடங்கள். ஆகவே, தங்கள் மூலம் மாண்புமிகு முதலமைச்சரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து அந்த இடத்தில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: 'அமைத்துத் தர முடியுமா?' என்பது கேள்வி நேரத்திலே எழுப்ப வேண்டியது. 'தர வேண்டும்' என்பது காவல் துறை மானியத்திலே பேச வேண்டியது.

டாக்டர் எம். மோசஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைத்துத் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நேரம் வரும்போது முடியும் என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச.க. வெங்கடேசன்.

திரு. ச.க. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் வட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பவுஞ்சூரில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே இருக்கக்கூடிய காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை

1996 ஆகஸ்ட் 7]

போதுமானதாக இல்லை என்பதையும், காவலர்களுடைய எண்ணிக்கையும் போதுமானதாக இல்லை என்பதையும் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். எனவே, அதற்குரிய ஏற்பாடுகள், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுள்ள இடங்களில் மாத்திரம் அல்லாமல் மற்ற இடங்களிலும் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *107*, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

107—

தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை

* *239*—**திரு.செ. இராமலிங்கம்.**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1991-92 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள தொழிற்கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

துறை அளித்துள்ள விடை 'ஆம்' நீதிமன்றத் தீர்ப்பு காரணமாக நடைமுறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முதல் இரண்டு ஆண்டு காலத்தில் கூட சுயநிதி கல்லூரிகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்படவில்லை. எனவே, அப்படி சட்டத்திற்குப் புறம்பாக இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அமுல்படுத்தாத கல்லூரிகளின் அங்கீகாரம் இரத்து செய்யப்படுமா அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.